திண்டுக்கல் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

பிறப்பிப்பவர் - சீ.கருப்புசாமி. எம்.எஸ்.சி, எம்.எட்., எம்.பில்

ந.க.எண்.7512/அ1/2021 நாள்: .12.2021

பொருள்: பள்ளிக்கல்வி - அமைச்சுப்பணி - கருணை அடிப்படை நியமனம் பணிவரன்முறை - திருபுமதன் என்பாருக்கு இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்து - ஆணை வழங்குதல் - சார்பு.

பார்வை:
1.அரசாணை(நிலை)எண்.46, நாள்:26.02.2021
2.திண்டுக்கல் மாவட்ட கல்வி அலுவலரின் செயல்முறைகள், ந.க.எண்.4450/அ1/2014. நாள்:05.06.2017
3.தேவகோட்டை மாவட்ட கல்வி அலுவலரின் கடித, ந.க.எண்.197/அ1/2021. நாள்: .02.2021

---

திண்டுக்கல் மாவட்டம், நத்தம் உதவி தொடக்கக்கல்வி அலுவலகத்தில் கருணை அடிப்படை நியமனத்தின் மூலம் பார்வை 2இல் காணும் செயல்முறைகளின்படி, இளநிலை உதவியாளர் பதவியில் நியமனம் செய்யப்பட்ட திருபுமதன் என்பார் மேற்காண் அலுவலகத்தில் 06.06.2017 முற்பகல் முதல் இளநிலை உதவியாளராக பணியேற்று பணிபுரிந்து, தற்போது மாறுதலில் சிவகங்கை மாவட்டம் தேவகோட்டை கல்வி மாவட்டம் சாக்கோட்டை வட்டாரக்கல்வி அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரியும் திருபுமதன் என்பாருக்கு இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன் முறை செய்து ஆணை வழங்கக்கோரி பார்வை 3ல் காணும் கடிதம் வாயிலாகக் கருத்துரு பெறப்பட்டுள்ளது. மேற்படி பணியாளருக்கு இளநிலை உதவியாளர் பதவியில் கீழ்காணும் நிபந்தனைகளின் அடிப்படையில் பணியில் சேர்ந்த நாளான 06.06.2017 முற்பகல் முதல் பணிவரன் முறை செய்து ஆணை வழங்கப்படுகிறது.

| வ.எண் | பெயர் மற்றும் பதவி/ பணியாற்றும்பள்ளி | இளநிலை உதவியாளர் பதவியில் நியமன நாள் | இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்யப்படும் நாள் |
|---|---|---|---|
| 1. | திருபுமதன்<br>இளநிலை உதவியாளர்,<br>வட்டாரக்கல்வி அலுவலகம்,<br>நத்தம்,<br>திண்டுக்கல் மாவட்டம். | 06.06.2017 முற்பகல் | 06.06.2017 முற்பகல் |

நிபந்தனைகள்:

1. இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்யப்பட்ட நாளிலிருந்து தொடர்ந்து மூன்றாண்டுகள் பணிக்காலத்திற்குள் இரண்டாண்டுகள் பூர்த்தி செய்த பின்னரே இளநிலை உதவியாளர் பதவியில் தகுதிகாண் பருவம் முடித்து ஆணை வழங்கப்படும்.
2. உயர்நிலைப் பள்ளிப்படிப்பில் தமிழை மொழிப்பாடமாகவே அல்லது கற்பிப்பு மொழியாகவோ பயிலாமல் இருப்பின், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையக் குழுமத்தால் நடத்தப்படும் தமிழ் இரண்டாம் நிலைத் தேர்வில் பணிவரன்முறை செய்த நாளிலிருந்து இரண்டாண்டிற்குள் தேர்ச்சி பெற வேண்டும்.
3. இளநிலை உதவியாளர் பதவியில் தகுதிகாண் பருவம் முடிக்கப்பட்ட பின்னரே இரண்டாவது மற்றும் தொடர் ஊதிய உயர்வுகள் வழங்க இயலும்.

1/12/21

முதன்மைக்கல்வி அலுவலர்,
திண்டுக்கல்.

1/12/2021

பெறுநர்:

1. மாவட்டக்கல்வி அலுவலர், திண்டுக்கல், திண்டுக்கல் மாவட்டம்
2. வட்டாரக் கல்வி அலுவலர், சாக்கோட்டை, சிவகங்கை மாவட்டம்.
3. சார்ந்தபணியாளர் (உரியவழியாக).